# குகை மேல்நிலைப்பள்ளி

# +2 கணக்குப் பதிவியல்

## வினா வங்கி

## (பயிற்சி கணக்குகள் மட்டும்)


**PREPARED BY**

**G.PRAKASH. M.COM.M.PHIL.B.ED.D.TED.,**

**9488270034**


2019

## 1. முழுமை பெறாத பதிவுகளிலிருந்து கணக்குகள்

### 2, 3 & 5 மதிப்பெண் வினாக்கள்

**1. கீழ்க்காணும் விவரங்களிலிருந்து இலாபம் அல்லது நட்டம் கண்டறியவும்**

| விவரம் | ₹ |
|---|---|
| ஆண்டின் தொடக்க முதல் (ஏப்ரல் 1, 2018) | 9,600 |
| ஆண்டின் இறுதி முதல் (மார்ச் 31, 2019) | ? |
| அவ்வாண்டில் கொண்டு வந்த கூடுதல் முதல் | 4,000 |
| அவ்வாண்டில் எடுப்புகள் | 2,400 |
| அவ்வாண்டில் இலாபம் | 4,800 |

**2. பின்வரும் விவரங்களிலிருந்து பெறுதற்குரிய மாற்றுச்சீட்டு கணக்கு தயாரிக்கவும் மற்றும் கடனாளிகளிடமிருந்து பெற்ற மாற்றுச்சீட்டுத் தொகையினைக் கணக்கிடவும்**

| விவரம் | ₹ |
|---|---|
| ஆண்டு தொடக்கத்தில் பெறுதற்குரிய மாற்றுச்சீட்டு | 7,800 |
| ஆண்டு முடிவில் பெறுதற்குரிய மாற்றுச்சீட்டு | 6,000 |
| பெறுதற்குரிய மாற்றுச்சீட்டுக்காக ரொக்கம் பெற்றது | 20,900 |
| பெறுதற்குரிய மாற்றுச்சீட்டு மறுக்கப்பட்டது | 1,800 |

**3. பின்வரும் விவரங்களிலிருந்து பெறுதற்குரிய மாற்றுச்சீட்டு கணக்கு தயாரிக்கவும் மற்றும் கடனாளிகளிடமிருந்து பெற்ற மாற்றுச்சீட்டுத் தொகையினைக் கணக்கிடவும்**

| விவரம் | ₹ |
|---|---|
| ஆண்டு தொடக்கத்தில் பெறுதற்குரிய மாற்றுச்சீட்டு | 7,800 |
| ஆண்டு முடிவில் பெறுதற்குரிய மாற்றுச்சீட்டு | 6,000 |
| பெறுதற்குரிய மாற்றுச்சீட்டுக்காக ரொக்கம் பெற்றது | 20,900 |
| பெறுதற்குரிய மாற்றுச்சீட்டு மறுக்கப்பட்டது | 1,800 |

**4. பின்வரும் விவரங்களிலிருந்து விடுபட்ட தகவலைக் காணவும்.**

| விவரம் | ₹ |
|---|---|
| 31.3.2018 அன்று இறுதி முதல் | 8,000 |
| அவ்வாண்டில் கொண்டு வந்த கூடுதல் முதல் | 3,000 |
| அவ்வாண்டில் எடுப்புகள் | 1,500 |
| 01.4.2017 அன்று தொடக்க முதல் | ? |
| 31.3.2018 ஆம் நாளோடு முடிவடையும் ஆண்டில் நட்டம் | 2,500 |

**5. பின்வரும் விவரங்களிலிருந்து மொத்தக் கடனாளிகள் கணக்கு, மொத்தக் கடனீந்தோர் கணக்கு, பெறுதற்குரிய மாற்றுச்சீட்டு கணக்கு மற்றும் செலுத்தற்குரிய மாற்றுச்சீட்டு கணக்கு தயாரித்து மொத்த விற்பனை மற்றும் மொத்தக் கொள்முதல் கணக்கிடவும்**

| விவரம் | ₹ | விவரம் | ₹ |
|---|---|---|---|
| **2018, ஏப்ரல் 1 அன்று இருப்புகள்:–** | | **2019, மார்ச் 31 அன்று இருப்புகள்:–** | |
| பற்பல கடனாளிகள் | 30,000 | பற்பல கடனாளிகள் | 35,000 |
| பற்பல கடனீந்தோர் | 10,000 | பற்பல கடனீந்தோர் | 15,000 |
| **பிற தகவல்கள்:–** | | வாராக்கடன் | 1,000 |
| கடனாளிகளிடமிருந்து பெற்ற | 1,60,000 | ரொக்க கொள்முதல் | 6,000 |

| | | | |
|---|---|---|---|
| ரொக்கம் | 1,500 | ரொக்க விற்பனை | 10,000 |
| வாடிக்கையாளருக்கு அளித்த | 14,000 | அளித்த தள்ளுபடி | 1,500 |
| தள்ளுபடி | 2,000 | பெற்ற தள்ளுபடி | 2,500 |
| கடனீந்தோருக்கு அளித்த ரொக்கம் | 3,000 | | |
| உள்திருப்பம் | | | |
| வெளித்திருப்பம் | | | |

**6. மனோ முறையான கணக்கேடுகளைப் பின்பற்றுவதில்லை அவருடைய பதிவேடுகளிலிருந்து பெறப்பட்ட தகவல்கள் பின்வருமாறு**

| விவரம் | 31.3.1990 | 31.3.1991 |
|---|---|---|
| ரொக்கம் | 9,860 | 800 |
| சரக்கிருப்பு | 38,520 | 57,020 |
| இயந்திரம் | 54,420 | 61,000 |
| பெறுதற்குரிய மாற்றுச்சீட்டு | --- | 16,480 |
| பற்பல கடனாளிகள் | 24,840 | 43,940 |
| பற்பல கடனீந்தோர் | 72,040 | 80,000 |
| அறைகலன் | 4,960 | 5,220 |

அவ்வாண்டில் அவர் கொண்டு வந்த கூடுதல் முதல் ₹ 20,000 மற்றும் அவர் வியாபாரத்திலிருந்து தன்னுடைய சொந்த பயனுக்காக மாதந்தோறும் ₹ 5,000 எடுத்துக்கொண்டார். மேலும் இயந்திரம் மீது தேய்மானம் 5% மற்றும் கடனாளிகள் மீது 5% வாரா ஐயக்கடன் ஒதுக்கு உருவாக்குக.
மேற்கண்ட தகவல்களிலிருந்து இலாப நட்ட அறிக்கை தயாரிக்கவும்.

**7. திரு. கணபதி என்பவரின் பின்வரும் விவரங்களிலிருந்து 2019, மார்ச் 31 ஆம் நாளோடு முடிவடையும் ஆண்டுக்குரிய வியாபார மற்றும் இலாபநட்டக் கணக்கு மற்றும் அந்நாளைய இருப்புநிலைக் குறிப்பு தயாரிக்கவும்.**

| விவரம் | 31.3.1993<br>₹ | 31.3.1994<br>₹ |
|---|---|---|
| சரக்கிருப்பு | 9,000 | 10,220 |
| பற்பல கடனீந்தோர் | 8,000 | 5,500 |
| பற்பல கடனாளிகள் | 22,000 | 30,000 |
| அறைகலன் | 1,000 | 1,000 |
| கட்டடிம் | 15,000 | 15,000 |
| ரொக்கம் | 6,400 (வ) | 500 |

<u>பிற தகவல்கள்:–</u>

| விவரம் | ₹ | விவரம் | ₹ |
|---|---|---|---|
| வட்டி செலுத்தியது | 100 | கடனாளிகளிடம் பெற்ற ரொக்கம் | 25,000 |
| எடுப்பு | 2,000 | ரொக்க விற்பனை | 15,000 |
| சம்பளம் | 8,500 | 31.3.1993 அன்றைய முதல் | 32,600 |
| இதர செலவுகள் | 7,500 | அறைகலன் மற்றும் கட்டிடம் மீது தேய்மானம் 5% | |
| கடனீந்தோருக்கு | 15,000 | கடனாளி மீது வாரா ஐயக்கடன் ஒதுக்கு | 1,500 |



| | | | |
|---|---|---|---|
| செலுத்தியது | | | |

**8. மேரி தன்னுடைய ஏடுகளை இரட்டைப்பதிவு முறையில் பராமரிப்பதில்லை 2019, மார்ச் 31 ஆம் நாளோடு முடிவடையும் ஆண்டுக்குரிய வியாபார மற்றும் இலாபநட்டக் கணக்கு மற்றும் அந்நாளைய இருப்புநிலைக் குறிப்பு தயாரிக்கவும்**

ரொக்க ஏடு

| விவரம் | ₹ | விவரம் | ₹ |
|---|---|---|---|
| இருப்பு கீ/கொ | 16,000 | கொள்முதல் | 28,000 |
| விற்பனை | 80,000 | கடனீந்தோர் | 40,000 |
| கடனாளிகள் | 60,000 | பொதுச் செலவுகள் | 12,000 |
| | | கூலி | 4,000 |
| | | எடுப்புகள் | 16,000 |
| | | இருப்பு கீ/இ | 56,000 |
| | 1,56,000 | | 1,56,000 |

<u>பிற தகவல்கள்:–</u>

| விவரம் | 1.4.2018 | 31.3.2019 |
|---|---|---|
| சரக்கிருப்பு | 20,000 | 32,000 |
| பற்பல கடனாளிகள் | 18,000 | ? |
| பற்பல கடனீந்தோர் | 28,800 | 13,600 |
| அறைகலனும் பொருத்துகைகளும் | 6,000 | 6,000 |
| இயந்திரம் | 80,000 | 80,000 |

| கூடுதல் தகவல்கள்:– | ₹ |
|---|---|
| கடன் கொள்முதல் | 28,200 |
| கடன் விற்பனை | 68,800 |
| தொடக்க முதல் | 1,11,200 |
| அளித்த தள்ளுபடி | 2,800 |
| பெற்ற தள்ளுபடி | 3,400 |

இயந்திரம் மீது ஆண்டுக்கு 10% தேய்மானம் நீக்கவும்.

## <u>2. இலாப – நோக்கமற்ற அமைப்புகளின் கணக்குகள்</u>

### <u>2, 3 & 5 மதிப்பெண்கள்</u>

**1. பின்வரும் விவரங்களிலிருந்து 31.மார்ச் 2002 ம் ஆண்டுக்குரிய பெறுதல் செலுத்தல் கணக்கை தயாரிக்க**

| விவரம் | தொகை<br>₹ | விவரம் | தொகை<br>₹ |
|---|---|---|---|
| நன்கொடை | 50,000 | அச்சு எழுதுபொருள் | 3,000 |
| நுழைவுக்கட்டணம் | 25,000 | முதலீடுகள் வாங்கியது | 12,000 |
| கட்டிடம் விற்றது | 1,00,000 | இதர செலவுகள் | 10,000 |
| வாடகை | 5,000 | | |

**2. 2012 டிசம்பர் 31 அன்றுடன் முடிவடையும் வருவாய் செலவினக் கணக்கில் காட்டப்பட வேண்டிய சந்தா தொகையை கணக்கிடுக.**

| பெறுதல்கள் | ₹ | ₹ | செலுத்தல்கள் | ₹ | ₹ |
|---|---|---|---|---|---|
| சந்தா: | | | | | |
| *2011* | *14,000* | | | | |
| *2012* | *86,000* | | | | |
| *2013* | *6,000* | *1,06,000* | | | |
| | | | | | |

கூடுதல் தகவல் :

* 2012 ம் ஆண்டு நிலுவையிலுள்ள சந்தா ரூ. 4,000.

**3. பின்வரும் விவரங்கள் வருவாய் செலவினக் கணக்கில் எவ்வாறு தோன்றும் எனக் காட்டுக.**

| | | |
|---|---|---|
| *01.04.2002* | அன்று எழுதுபொருள் இருப்பு | *ரூ. 1,300* |
| | எழுதுபொருள் வாங்கியது | *ரூ. 3,250* |
| *31.03.2002* | அன்று எழுதுபொருள் இருப்பு | *ரூ. 1,100* |

**4. பின்வரும் விவரங்கள் ராமர் மனமகிழ் சங்கத்தின் 2017–18 ம் ஆண்டுக்குரிய இறுதிக் கணக்குகளில் எவ்வாறு தோன்றும் எனக் காட்டுக.**

| | ₹ |
|---|---|
| *01.04.2007* பரிசு நிதி | *30,000* |
| *01.04.2007* பரிசு நிதி முதலீடு | *30,000* |
| பரிசுநிதி முதலீடு மூலம் பெற்ற வட்டி | *3,000* |
| பரிசுகள் வழங்கியது | *4,000* |
| பரிசு நிதிக்கான நன்கொடை பெற்றது | *12,000* |

**5. தாரமங்கலம் விளையாட்டு மன்றத்தின் 2017, ஏப்ரல் 1 அன்றைய முதல் நிதியைக் கணக்கிடவும்.**

| விவரம் | ₹ | விவரம் | ₹ |
|---|---|---|---|
| விளையாட்டு உபகரணங்கள் | 60,000 | விளையாட்டுப் போட்டி நிதி | 20,000 |
| கணிப்பொறி | 50,000 | விளையாட்டுப் போட்டி நிதி முதலீடுகள் | 20,000 |
| 2016–2017 ஆம் ஆண்டில் சந்தா பெற வேண்டியது | 10,000 | ரொக்கம் | 14,000 |
| 2017–2018 ஆம் ஆண்டில் முன்கூட்டிப் பெற்ற சந்தா | 16,000 | வங்கியிருப்பு | 42,000 |

**6. நண்பர்கள் கால்பந்து மன்றத்தின் 31.03.2017ம் நாளோடு முடிவடையும் ஆண்டுக்குரிய வருவாய் செலவின கணக்கு மற்றும் இருப்புநிலைக்குறிப்பு தயார் செய்க.**

பெறுதல் செலுத்தல் கணக்கு

| பெறுதல்கள் | ₹ | ₹ | செலுத்தல்கள் | ₹ | ₹ |
|---|---|---|---|---|---|
| இருப்பு கீ/கொ | | | அறைகலன் | | 7,000 |
| ரொக்கம் | *1,000* | | விளையாட்டு பொருள் | | |
| வங்கி | *10,000* | *11,000* | வாங்கியது | | 800 |
| சந்தா | | 5,000 | சிறப்பு விருந்து செலவுகள் | | 1,500 |
| உயில் கொடை | | | மின் கட்டணம் | | 900 |
| சிறப்பு விருந்து | | 6,000 | இருப்பு கீ/கொ | | |
| கட்டண வசூல் | | | ரொக்கம் | *1,800* | |
| | | 2,000 | வங்கி | 12,000 | 13,800 |
| | | 24,000 | | | 24,000 |

கூடுதல் தகவல்கள்:

1. *2018 ஏப்ரல் 1* அன்று அறைகலன் இருப்ப ரூ. 12,000
2. *2016–17*ல் பெற வேண்டிய சந்தா ரூ. 600
3. முதல் நிதி ரூ. 23,000.

**7. கீழே கொடுக்கப்பட்ட தகவல்களிலிருந்து இளங்கோ கபடி மன்றத்தின் மன்றத்தின் 2014, மார்ச் 31 ஆம் நாளோடு முடிவடையும் ஆண்டுக்குரிய பெறுதல்கள் மற்றும் செலுத்தல்கள் கணக்கைத் தயார் செய்யவும்.**

| விவரம் | ₹ | ₹ | விவரம் | ₹ |
|---|---|---|---|---|
| தொடக்க ரொக்கம் | | *1,000* | வாடகை செலுத்தியது | 3,000 |
| தொடக்க வங்கி | | 7,200 | விளையாட்டு உபகரணம் | |
| சந்தா பெற்றது : | | | வாங்கியது | 4800 |
| *2013–14* | | | மைதான பராமரிப்பு | 2,000 |
| *2014–15* | 500 | | செலவு | 2,500 |
| *2015–16* | 7,600 | | சம்பளம் | 1,500 |
| | 900 | 9,000 | அறைகலன் வாங்கியது | 1,200 |
| நுழைவுக்கட்டணம் | | 1,000 | அலுவலக செலவு | |
| பழைய விளையாட்டு | | | | |
| பொருள் விற்றது | | 2,200 | இருப்பு கீ/இ | 400 |
| நன்கொடைகள் | | 4,600 | **ரொக்கம்** | |
| போட்டி கட்டணம் | | 2,400 | | |
| இதர செலவுகள் | | 600 | | |

**8. தர்மபுரி இலக்கிய மன்றத்தின் 2018 மார்ச் 31ம் நாளோடு முடிவடையும் ஆண்டுக்கான பெறுதல்கள் மற்றும் செலுத்தல்கள் கணக்கு பின்வருமாறு.**

தர்மபுரி இலக்கிய மன்றம் 2018 மார்ச் 31 ம் நாளோடு முடிவடையும் ஆண்டுக்குரிய

ப பெறுதல்கள் மற்றும் செலுத்தல்கள் கணக்கு வ

| பெறுதல்கள் | தொகை ₹ | தொகை ₹ | செலுத்தல்கள்₹ | தொகை ₹ | தொ கை ₹ |
|---|---|---|---|---|---|
| இருப்பு கீ/கொ | | | மைதான பராமரிப்பு | | 33,000 |
| ரொக்கம் | 1,000 | | விளையாட்டுப் | | |
| வங்கி | 14,000 | 15,000 | போட்டிச் செலவுகள் | | 38,000 |
| சந்தா (2016 –17 ஆம் | | | பல்வகைச் செலவுகள் | | 22,000 |
| ஆண்டிற்கான | | | அறைகலன் | | 40,000 |
| **₹₹8000 உட்பட)** | | 60,000 | **இருப்பு கீ/இ :-** | | |
| உயில்கொடை | | 18,000 | கைரொக்கம் | 3,000 | |
| அரங்க வாடகை | | | வங்கி | 22,000 | |
| விளையாட்டு | | 20,000 | | | 25,000 |



G.PRAKASH.M.COM.M.PHIL.B.ED.D.TED. 9488270034 GUGAI HR.SEC.SCHOOL. SALEM 6.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| போட்டி நிதி வரவுகள் | | 45,000 | | | |
| | | 1,58,000 | | | 1,58,000 |

**கூடுதல் தகவல்கள்**

2017 ஏப்ரல் 1 அன்று மன்றத்தின் முதலீடு ₹₹80,000 ஆக இருந்தது. மன்றத்தின் விளையாட்டுப் போட்டி நிதிக் கணக்கின் வரவிருப்பில் ₹₹60,000 இருந்தது. 2018 மார்ச் 31 ல் பெற வேண்டிய சந்தா ₹₹8,000. மற்றும் 2018 மார்ச் 31 அன்று பெற வேண்டிய சந்தா ₹₹9,000 இறுதிக் கணக்குகளைத் தயார் செய்யவும்

9. **சேலம் பொழுது போக்கு மன்றத்தின் 2019 மார்ச் 31ம் நாளோடு முடிவடையும் ஆண்டுக்குரிய பெறுதல் மற்றும் செலுத்துதல் கணக்கு பின்வருமாறு.**

**பெறுதல் செலுத்தல் கணக்கு**

| பெறுதல்கள் | ₹ | ₹ | செலுத்தல்கள் | ₹ | ₹ |
|---|---|---|---|---|---|
| இருப்பு கீ/கொ | | | அறைகலன் | | 15,000 |
| ரொக்கம் | | 9,000 | எழுது பொருள் | | 2,400 |
| சந்தா | | | முதலீடு | | 12,500 |
| 2018–19 | 12,500 | | அஞ்சல் செலவு | | 1,000 |
| 2019–20 | 400 | 12,900 | | | |
| பொழுதுபோக்கு | | | இருப்பு கீ/இ | | |
| வருமானம் | | 12,000 | ரொக்கம் | | 3,500 |
| பல்வகை வரவு | | 500 | | | |
| | | 34,400 | | | 34,400 |

கூடுதல் தகவல்கள்

1. மன்றத்தில் 450 உறுப்பினர்கள் ஒவ்வொருவரும் ஆண்டு சந்தா ரு. 30 செலுத்துகின்றனர். 2. தொடக்க முதல் நிதி ரு. 9,300.

## *3. கூட்டாண்மை அடிப்படைக் கணக்குகள்*

### *2, 3 & 5 மதிப்பெண்கள்*

1. ரமா மற்றும் ரமேஷ் என்ற கூட்டாளிகள் தங்கள் இலாபம் மற்றும் நட்டங்களை 3:2 என்ற இலாப விகிதத்தில் பகிர்ந்து வருகின்றனர் . 2017, ஏப்ரல் 1 அன்று அவர்களின் முதல் முறையே மன்னன் ₹15,000 மற்றும் ரமேஷ் ₹ 10,000 ஆகும். அவர்களின் நடப்புக் கணக்குகள் ₹2,500 மற்றும் ₹2,000 என வரவிருப்பைக் காட்டியது . 2018, மார்ச் 31 ஆம் நாளோடு முடிவடையும் ஆண்டுக்குரிய முதல் மீது வட்டி ஆண்டுக்கு 6% எனக் கணக்கிட்டு , அதற்குரிய குறிப்பேட்டுப் பதிவுகளைத் தரவும்.

2. **இராஜன் மற்றும் தேவன் என்ற கூட்டாளிகள் தங்கள் இலாப நட்டங்களை 2:1 என்ற விகிதத்தில் பகிர்ந்து வருகின்றனர் . அவர்களின் பின்வரும் இருப்புநிலைக் குறிப்பிலிருந்து 2018, டிசம்பர் 31 ஆம் நாளோடு முடிவடையும் ஆண்டுக்குரிய முதல் மீது வட்டி ஆண்டுக்கு 6% கணக்கிடவும்.**

**2018, டிசம்பர் 31 ஆம் நாளைய இருப்புநிலைக் குறிப்பு பொறுப்புகள்**

| பொறுப்புகள் | தொகை ₹ | தொகை ₹₹ | சொத்துகள் | தொகை ₹₹ |
|---|---|---|---|---|
| முதல் கணக்குகள்: | | | பல்வகைச் சொத்துகள் | 2,20,000 |
| இராஜன் | 1,00,000 | | | |
| தேவன் | 80,000 | 1,80,000 | | |
| இலாபநட்டப் பகிர்வு கணக்கு | | 40,000 | | |
| | | 2,20,000 | | 2,20,000 |

2018, ஏப்ரல் 1 அன்று இராஜன் கொண்டுவந்த கூடுதல் முதல் ரு 40,000 மற்றும் 2018,செப்டம்பர் 1 அன்று தேவன் கொண்டு வந்த கூடுதல் முதல் 30,000. அவ்வாண்டின் எடுப்புகள் முறையே இராஜன் 20,000, தேவன் 10,000 ஆகும். அவ்வாண்டில் ஈட்டிய இலாபம் 70,000.

3. **தங்கம் என்ற கூட்டாளி 2014, அக்டோபர் 1 அன்று ₹ 60,000 எடுத்துக்கொண்டார். எடுப்புகள் மீது வட்டிஆண்டுக்கு 6% என கணக்கிடப்பட வேண்டும். 2018, டிசம்பர் 31 அன்று எடுப்புகள் மீது வட்டி கணக்கிட்டு அதற்குரிய குறிப்பேட்டுப் பதிவுகளைத் தரவும்.**

4. **நலன் என்பவர் ஒரு கூட்டாண்மை நிறுவனத்தின் கூட்டாளி. கூட்டாண்மை ஒப்பாவணத்தின்படி எடுப்புகள் மீது வட்டி ஆண்டுக்கு6% கணக்கிடப்பட வேண்டும். டிசம்பர் 31 ஆம் நாளோடு முடிவடையும் 2018 ஆம் ஆண்டில் அவருடைய எடுப்புகள் பின்வருமாறு:**

| நாள் | ₹ |
|---|---|
| மார்ச் 1 | 4,000 |
| ஜுன் 1 | 20,000 |
| ஆகஸ்ட் 1 | 8,000 |
| நவம்பர் 1 | 12,000 |

**எடுப்புகள் மீதான வட்டித் தொகையைக் கணக்கிடவும்**

5. **ராதா மற்றும் அம்பிகா இருவரும் கூட்டாளிகள் . ராதா ஒவ்வொரு அரையாண்டின் தொடக்கத்திலும் ₹ 9,000 எடுத்துக் கொண்டார். எடுப்புகள் மீதான வட்டி ஆண்டுக்கு 10%. 2018, மார்ச் 31ஆம் நாளோடு முடிவடையும் ஆண்டுக்குரிய எடுப்புகள் மீது வட்டி சராசரி கால முறையைப் பயன்படுத்திக் கணக்கிடவும்**

6. **பின்வரும் தகவல்களிலிருந்து ராஜா மற்றும் ராணி என்ற கூட்டாளிகளின் முதல் மாறுபடும் முதல் எனக் கொண்டு அவர்களின் முதல் கணக்குகளைத் தயாரிக்கவும்**

| விவரம் | ராஜா ₹ | ராணி ₹ |
|---|---|---|
| 2018, ஜனவரி 1 அன்று முதல் (வரவிருப்பு) | 50,000 | 40,000 |
| 2018 ஆம் ஆண்டில் எடுப்புகள் | 7,000 | 4,000 |
| எடுப்புகள் மீது வட்டி | 200 | 100 |
| 2018 – ல் இலாபப் பங்கு | 5,200 | 4,000 |
| முதல் மீது வட்டி | 3,000 | 2,400 |
| ஊதியம் | 4,500 | – |
| கழிவு | – | 2,100 |

7. **பிரகாஷ் மற்றும் கார்த்திக் வழங்கிய முதல் முறையே ₹30,000 மற்றும் ₹20,000. அவர்களின் இலாபப்பகிர்வு விகிதம் 2:1. அவ்வாண்டின் முதல் மீது வட்டி கணக்கிடுவதற்கு முன் இலாபம் ₹2,500. பின்வரும் நிலைகளில் முதல் மீதான வட்டித் தொகையைக் கணக்கிடவும்**

(i) முதல்மீது வட்டி குறித்து கூட்டாண்மை ஒப்பாவணத்தில் ஏதும் குறிப்பிடாத போது

(ii) கூட்டாண்மை ஒப்பாவணத்தின் படி, முதல்மீது வட்டி ஆண்டுக்கு 4% அனுமதிக்கப் படும் போது

(iii) கூட்டாண்மை ஒப்பாவணத்தின்படி முதல்மீது வட்டி ஆண்டுக்கு 6% அனுமதிக்கும் போது

8. சரண்யா மற்றும் லட்சுமி இருவரும் ஒரு கூட்டாண்மை நிறுவனத்தின் கூட்டாளிகள். யமுனா கழிவுக்கு முன் உள்ள நிகர இலாபத்தில் 20% கழிவாகப் பெற வேண்டும். லட்சுமி கழிவுக்குப் பின் உள்ள நிகர இலாபத்தில் 20% கழிவாகப் பெற வேண்டும். 2018, மார்ச் 31 ஆம் நாளோடு முடிவடையும் ஆண்டுக்குரிய கழிவு கணக்கிடுவதற்கு முன்னர் உள்ள நிகர இலாபம் ₹ 60,000. யமுனா மற்றும் லட்சுமியின் கழிவினைக் கண்டுபிடிக்கவும். மேலும் இலாபப் பகிர்வினையும் கணக்கிடவும்

9. அந்தோணி மற்றும் ரஞ்சித் 2018, ஏப்ரல் 1 அன்று முறையே ₹4,00,000 மற்றும் ₹3,00,000 முதலாகக் கொண்டு தொழில் தொடங்கினர். கூட்டாண்மை ஒப்பாவணத்தின்படி அந்தோணி ஆண்டுக்கு₹90,000 ஊதியம் பெற வேண்டும். முதல் மீது வட்டி ஆண்டுக்கு 5% மற்றும் அந்தோனியின் ஊதியம் மற்றும் கழிவினை கழித்ததற்கு பின் உள்ள இலாபத்தில்25 % ரஞ்சித் கழிவாகப் பெற வேண்டும். இரு கூட்டாளிகளுக்கு இடையேயான இலாபப் பகிர்வு விகிதம்1:1. அவ்வாண்டில் நிறுவனம் ஈட்டிய இலாபம்₹3,65,000. இலாபநட்டப் பகிர்வு கணக்கை தயாரிக்கவும் நிறுவனம் ஒவ்வொரு ஆண்டும் மார்ச் 31–ல் கணக்கு முடிக்கிறது.

## 4. நற்பெயர் கணக்குகள்

### 2, 3 & 5 மதிப்பெண்கள்

01. பின்வரும் விவரங்களிலிருந்து சராசரி இலாபம் கணக்கிடவும்.

2016 – ₹ 8,000 : 2017– ₹ 10,000 : 2018 – ₹ 9,000

02. சராசரி இலாபம் ₹15,000 ஆக இருக்கும் போது 2 ஆண்டுகள் கொள்முதல் என்ற அடிப்படையில் நற்பெயரின் மதிப்பைக் கணக்கிடவும்.

03. ஒரு நிறுவனத்தின் கடந்த நான்கு ஆண்டுகளின் இலாபங்கள் மற்றும் நட்டங்கள் பின்வருமாறு.

2012 – 15,000 , 2013 – 17,000 , 2014 – 6,000 (நட்டம்) , 2015 – 14,000

4 ஆண்டுகள் சராசரி இலாபத்தில் 5 ஆண்டுகள் கொள்முதல் என்ற அடிப்படையில் நற்பெயரின் மதிப்பைக் கணக்கிடவும்.

04. கடந்த 4 ஆண்டுகள் சராசரி இலாபத்தில் 3 ஆண்டுகள் கொள்முதல் என்ற அடிப்படையில் கூட்டு சராசரி இலாபத்தினை பயன்படுத்தி, நற்பெயரின் மதிப்பைக் கணக்கிடவும்.

| ஆண்டு | தொகை | நிறைகள் |
|---|---|---|
| 2011 | 5,000 | 1 |
| 2012 | 6,000 | 2 |
| 2013 | 8,000 | 3 |
| 2014 | 9,000 | 4 |



05. பின்வரும் விவரங்களிலிருந்து, உயர் இலாபத்தில் 3 ஆண்டுகள் கொள்முதல் என்ற அடிப்படையில் நற்பெயரின் மதிப்பைக் கணக்கிடவும்.
(i) பயன்படுத்தப்பட்ட முதல் : ₹ 2,00,000
(ii) சாதாரண இலாபவிகிதம் 15%
(iii) வியாபாரத்தின் சராசரி இலாபம் ₹ 42,000.

06. பின்வரும் விவரங்களிலிருந்து, உயர் இலாபத்தில் 3 ஆண்டுகள் கொள்முதல் என்ற அடிப்படையில் நற்பெயரின் மதிப்பைக் கணக்கிடவும்.
(i) பயன்படுத்தப்பட்ட முதல் : ₹ 2,00,000
(ii) சாதாரண இலாபவிகிதம் 15%
(iii) வியாபாரத்தின் சராசரி இலாபம் ₹ 42,000.

07. பின்வரும் தகவல்களிலிருந்து, உயர் இலாபத்தினை மூலதனமாக்கல் முறையில் நற்பெயரின் மதிப்பைக் கணக்கிடவும்.
(அ) சாதாரண இலாபவிகிதம் 10%
(ஆ) கடந்த 4 ஆண்டுகளின்இலாபங்கள் ₹ 60,000, ₹ 80,000, ₹ 50,000 மற்றும் ₹ 90,000.
(இ) மேற்குறிப்பிட்டஇலாபம் ₹ 60,000 ல் திரும்பத் திரும்ப நிகழா வருமானம் ₹ 6,000 சேர்ந்துள்ளது.
(ஈ) சராசரி பயன்படுத்தப்பட்டமுதல் ₹ 6,00,000.

08. பின்வரும் விவரங்களைக் கொண்டு, ஆண்டுத்தொகை முறையில் நற்பெயரின் மதிப்பைக் கணக்கிடவும்.
(i) சராசரி இலாபம் ₹ 14,000
(ii) சாதாரண இலாபம் ₹ 4,000
(iii) சாதாரண இலாபவிகிதம் 15%
(iv) நற்பெயருக்கான கொள்முதல் ஆண்டுகள் 5
5 ஆண்டுகளில் ஆண்டுக்கு 15% என்ற வட்டி விகிதத்தில் ₹ 1ன் தற்போதைய ஆண்டுத்தொகை மதிப்பு ₹ 3.352.

09. பின்வரும் தகவல்களிலிருந்து மூலதனமாக்கல் முறையில் நற்பெயரின் மதிப்பைக் காணவும்.
(அ) சராசரி இலாபம் = ₹ 40,000
(ஆ) சாதாரண இலாபவிகிதம் = 10%
(இ) பயன்படுத்தப்பட்டமுதல் = ₹ 2,50,000.

## 5. கூட்டாண்மை சேர்ப்பு

### 2, 3 & 5 மதிப்பெண்கள்

1. கலா மற்றும் மாலா எனும் கூட்டாளிகள் முறையே 3:2 எனும் விகிதத்தில் இலாப நட்டங்களை பகிர்ந்து வந்தனர். 31.03.2017 அன்று வர்ஷினி என்பவரை கூட்டாளியாக சேர்த்தனர். அவர் சேர்ந்த நாளில் நிறுவன ஏடுகளில் காப்பு நிதி ₹ 25,000 எனக் காட்டியது. காப்புநிதியை பகிர்ந்தளிக்க குறிப்பேட்டுப் பதிவு தரவும்.

2. மதுமிதா மற்றும் காவியா இருவரும் கூட்டாளிகள். அவர்கள் தங்கள் இலாப நட்டங்களை 3:2 என்ற விகிதத்தில் பகிர்ந்து வருகின்றனர். அவர்கள் அகல்யா

என்பவரை கூட்டாளியாகச் சேர்த்து கொண்டனர். 2019, மார்ச் 31 ஆம்நாளைய இருப்பு நிலைக்குறிப்பு பின்வருமாறு:

3. A , Q என்ற கூட்டாளிகள் முறையே 3 : 2 எனும் விகிதத்தில் இலாபம் பகிர்ந்து வருகின்றனர். அவர்கள் T என்பரை 1/5 பங்குக்கு இருவரும் சமமாக தியாகம் செய்து சேர்த்து கொள்கின்றனர். அவர்களுடைய புதிய இலாபப் பகிர்வு விகிதம் கணக்கிடுக.

4. பிரகாஷ் மற்றும் கார்த்திக் எனும் கூட்டாளிகள் 3 : 2 என இலாபநட்டம் பகிர்ந்து வந்தனர். பாசில் என்பவரை புதிய கூட்டாளியாக சேர்த்துக் கொண்டனர். அவர்களது புதிய இலாப விகிதம் 5 : 3 : 2. பின்வரும் மறுமதிப்பீடுகள் செய்யப்பட்டன. தேவையான குறிப்பேட்டுப் பதிவுகள் தந்து மறுமதிப்பீட்டுக் கணக்கு தயாரிக்கவும்.

1. கட்டிடத்தின் மதிப்பு ₹ 30,000
2. இயந்திரத்தின் மதிப்பு ₹ 8,000 குறைக்கப்பட்டது
3. வாரா ஐயக்கடன் ஒதுக்கு ₹ 2,000 உருவாக்கப்பட்டது.

5. ராம் மற்றும் ராஜ் இருவரும் ஒரு கூட்டாண்மை நிறுவனத்தின் கூட்டாளிகள் அவர்கள் 4 : 3 என்ற விகிதத்தில் இலாபம் மற்றும் நட்டங்களை பகிர்ந்து வருகின்றனர். 2014 ஏப்ரல் 1 அன்று சிவம் என்வரை கூட்டாளியாகச் சேர்த்துக் கொண்டனர். சிவம் கூட்டாண்மையில் சேர்ந்த அன்று நிறுவன ஏடு நற்பெயர் மதிப்பினை ₹ 35,000 என்று காட்டியது. மாறுபடும் முதல் முறையில் பராமரிக்கப்படுவதாக கருதி தேவையான குறிப்பேட்டுப் பதிவுகளைத் தரவும். கூட்டாளிகள் பின்வரும் முடிவினை எடுத்தனர்.

1. ஏட்டில் உள்ள நற்பெயர் தொகை முழுவதையும் போக்கெழுதுக
2. ஏட்டில் உள்ள நற்பெயரில் ₹ 21,000 மட்டும் போக்கெழுதுக.

6. அமல் மற்றும் விமல் இருவரும் ஒரு கூட்டாண்மை நிறுவனத்தின் கூட்டாளிகள். அவர்கள் 7:5 என்ற விகிதத்தில் இலாபங்கள் மற்றும் நட்டங்களை பகிர்ந்து வந்தனர். 2019, மார்ச் 31 அன்றைய அவர்களின் இருப்புநிலைக் குறிப்பு பின்வருமாறு:

| பொறுப்புகள் | ₹ | ₹ | சொத்துக்கள் | ₹ |
|---|---|---|---|---|
| முதல் க/கு | | | கட்டிடம் | 80,000 |
| அமல் | 70,000 | | அறைகலன் | 20,000 |
| விமல் | 50,000 | 1,20,000 | கடனாளி | 25,000 |
| இலாபநட்ட பகிர்வு க/கு | | 30,000 | சரக்கிருப்பு | 30,000 |
| பற்பல கடனீந்தோர். | | 24,000 | வங்கி | 19,000 |
| | | 1,74,000 | | 1,74,000 |

1.4.2019 இல் நிர்மல் புதிய கூட்டாளியாக சேருகிறார். அவர்₹ 30,000 முதலுடன் எதிர்கால இலாபப்பங்கில் 1/3 விகிதத்தில், பின்வரும் சரிக்கட்டலுடன் கூட்டாளியாகிறார்.

(அ) சரக்கிருப்பின் மதிப்பு ₹ 5,000 குறைக்கப்பட வேண்டும்.
(ஆ) வாராஐயக்கடன் ஒதுக்கு ₹ 3,000 உருவாக்கப்பட வேண்டும்.
(இ) கட்டடம்₹ 20,000 மதிப்பேற்றம் செய்யப்பட வேண்டும்.



மறுமதிப்பீட்டுக் கணக்கு மற்றும் கூட்டாளி சேர்க்கைக்கு பின்பான கூட்டாளி முதல் கணக்கு தயார் செய்யவும்.

7. மணி, ரவி என்ற கூட்டாளிகள் 3 : 2 எனும் விகிதத்தில் நிறுவனத்தின் இலாப நட்டத்தை பகிர்ந்து வந்தனர். 2004 மார்ச் 31 ஆம் நாளைய இருப்புநிலைக்குறிப்பு பின்வருமாறு.

| பொறுப்புகள் | ₹ | சொத்துக்கள் | ₹ |
|---|---|---|---|
| பற்பல கடனீந்தோர் | 90,000 | ரொக்கம் | 5,000 |
| செலுத்துதற்குரிய மாற்றுச்சீட்டுகள் | 25,000 | வங்கி | 40,000 |
| முதல் க/கு :– | | சரக்கிருப்பு | 60,000 |
| மணி 1,50,000 | | அறைகலன் | 20,000 |
| ரவி 1,20,000 | 2,70,000 | நிலம் கட்டிடம் | 2,00,000 |
| | | பற்பல கடனாளிகள் 62,000 | |
| | | (–) ஐயக்கடன் ஒதுக்கு 2,000 | 60,000 |
| | 3,85,000 | | 3,85,000 |

2004 ஏப்ரல் 1 ம் நாளன்று அவரகள் சாலமன் என்பவரை கீழ்க்காணும் சரிகட்டுதலுக்கு ஒப்புக் கொண்டு கூட்டாண்மையில் சேர்த்துக் கொண்டனர்.

1. சாலமன் ரூ. 1,00,000 முதல் கொண்டு வருவது
2. நிலம் கட்டிடத்தின் மதிப்பு ரூ. 20,000 அதிகரிப்பது
3. சரக்கிருப்பு மற்றும் அறைகலன் முறையே ரூ. 10,000 , ரூ. 4,000 தேய்மானம் அனுமதித்தது
4. கடனீந்தோரில் ரூ. 15,000 த்தை போக்கெழுதுவது
5. ஐயக்கடன் ஒதுக்கை ரூ. 1,000 அதிகரிப்பது.

மறுதிப்பீட்டு கணக்க , முதல் கணக்குகள் மற்றும் புதிய நிறுவனத்தின் இருப்புநிலைக்குறிப்பை தயாரிக்க.

8. அன்பு மற்றும் சங்கர் என்ற கூட்டாளிகள் இலாபநட்டங்களை 7:5 எனும் விகிதத்தில் பகிர்ந்து வந்தனர். அவர்களின் 2018, மார்ச் 31 ஆம் நாளைய இருப்பு நிலைக் குறிப்பு பின்வருமாறு:

| பொறுப்புகள் | ₹ | ₹ | சொத்துக்கள் | ₹ |
|---|---|---|---|---|
| முதல் க/கு | | | கணிப்பொறி | 40,000 |
| அன்பு | 4,00,000 | | வாகனம் | 1,60,000 |
| சங்கர் | 3,00,000 | 7,00,000 | சரக்கிருப்பு | 4,00,000 |
| இலாபநட்ட க/கு | | 1,20,000 | கடனாளிகள் | 3,60,000 |
| பற்பல கடனீந்தோர் | | 1,20,000 | வங்கி | 40,000 |
| தொழிலாளர் ஈட்டுநிதி. | | 60,000 | | |
| | | 10,00,000 | | 10,00,000 |

பின்வரும் விவரங்கள் அடிப்படையில் இராஜேஷ் என்பவர் 1/5 பங்கிற்கு கூட்டாளியாகச் சேர்க்கப்பட்டார்.

(i) நிறுவனத்தின் நற்பெயர்₹ 75,000 என மதிப்பிடப்பட்டது. இராஜேஷ் நற்பெயரில் தன்னுடைய பங்கினை ரொக்கமாகக் கொண்டு வந்தார்.

(ii) இராஜேஷ் ₹ 1,50,000 முதலாகக் கொண்டு வந்தார்.

(iii) வாகனம் ₹ 2,00,000, சரக்கிருப்பு ₹ 3,80,000, கடனாளிகள் ₹ 3,50,000 என மதிப்பிடப்பட்டது.

(iv) எதிர்பார்க்கப்படும் தொழிலாளர் ஈட்டு நிதி மீதான கோரிக்கை ₹ 10,000.

(v) பதிவுறா முதலீடு ₹ 5,000 கணக்கில் கொண்டு வரப்பட்டது.

மறுமதிப்பீடு கணக்கு, முதல் கணக்கு மற்றும் இராஜேஷின் சேர்ப்பிற்கு பின்வரும் இருப்புநிலைக் குறிப்பையும் தயார் செய்யவும்.

## 3. கூட்டாண்மை விலகல் மற்றும் இறப்பு

### 2, 3 & 5 மதிப்பெண்கள்

1. ராஜா, ரவி மற்றும் விஷால் எனும் கூட்டாளிகள் 3 ; 2 ; 1 எனும் விகிதத்தில் இலாபம் பகிர்ந்து வந்தனர். ராஜா விலகினார். ரவி மற்றும் விஷால் ஆகியோரின் புதிய இலாப விகிதம் 2 ; 1 ஆகும். ஆதாய விகிதம் காண்க.

2. ரமா, தனம் மற்றும் பாக்யா ஆகிய கூட்டாளிகள் 4 ; 4 ; 2 எனும் விகிதத்தில் இலாபம் பகிர்ந்து வந்தனர். 2013 மார்ச் 31 ஆம் நாள் நிறுவனத்திலிருந்து பாக்யா விலகினார். பாக்யா விலகிய நாளன்று ஏடுகளில் நற்பெயர் ₹ 80,000 எனக் காட்டியது. அவர்கள் முதல் மாறுபடும் முதல் எனக் கொண்டு தேவையான குறிப்பேட்டுப் பதிவுகளைத் தரவும்.

   (அ) நற்பெயர் முழுவதையும் போக்கெழுத கூட்டாளிகள் முடிவெடுத்தால்

   (ஆ) நற்பெயரில் பாதித்தொகையை போக்கெழுத கூட்டாளிகள் முடிவெடுத்தால்

3. யமுனா , நமிதா மற்றும் ஆனந்தி எனும் கூட்டாளிகள் இலாப நட்டங்களை சமமாகப் பகிர்ந்து வந்தனர். 31. 3. 2019 அன்று ஆனந்தி என்பவர் கூட்டாண்மையிலிருந்து விலகினார். முந்தைய ஆண்டுகளின் இலாபம் பின்வருமாறு

   2016 ; ₹ 10000 2017 ; ₹ 20000 2018 ; ₹ 60000 ஆம் ஆண்டிற்கான ஆனந்தியின் இலாபப்பங்கை அவர் விலகும் நாள் வரை பின்வரும் நிலைகளில் கணக்கிடவும்.

   (அ) முந்தைய ஆண்டின் இலாபத்தை அடிப்படையாகக் கொண்டு இலாபத்தைப் பகிர்ந்தளிக்க வேண்டும்.

   (ஆ) கடந்த மூன்று ஆண்டுகளின் சராசரி இலாபத்தை அடிப்படையாகக் கொண்டு இலாபத்தைப் பகிர்ந்தளிக்க வேண்டும்.

   மேலும் கூட்டாளிகளின் முதல் கணக்கு மாறுபடும் முதல் முறை எனக் கொண்டு தேவையான குறிப்பேட்டுப் பதிவுகளைத் தரவும்.

4. ராதா, கவிதா மற்றும் லதா ஆகிய கூட்டாளிகள் தங்கள் இலாப நட்டங்களை முறையே 5 : 3 : 3 என்ற விகிதத்தில் பகிர்ந்து வந்தனர். 2016 மார்ச் 31 அன்று கவிதா நிறுவனத்திலிருந்து விலகுகிறார். அவர் விலகும் நாளில் அவருடைய முதல் கணக்கு ₹ 4,00,000 வரவு இருப்பினைக் காட்டியது.

   (i) அவருடைய தொகை காசோலை மூலம் உடனடியாகச் செலுத்தப்பட்டால்

   (ii) அவருடைய தொகை உடனடியாகச் செலுத்தப்படவில்லையெனில்



   (iii) ₹ 1,40,000 உடனடியாக காசோலை மூலம் செலுத்தப்பட்டது

   என்ற சூழ்நிலைகளுக்கான குறிப்பேட்டுப் பதிவுகளைத் தரவும்.

5. வினோத், கார்த்தி மற்றும் பிரணவ் என்ற கூட்டாளிகள் 2:2:1 என்ற விகிதத்தில் இலாபம் மற்றும் நட்டங்களைப் பகிர்ந்து வந்தனர். 2018, ஏப்ரல் 1 அன்று பிரணவ் என்பவர் கூட்டாண்மையிலிருந்து விலகினார். அவருடைய விலகலின்போது கீழ்க்கண்ட சரிக்கட்டுதல்கள் செய்யப்பட வேண்டும்
   (i) நிலம் மற்றும் கட்டடத்தின் மதிப்பை `18,000 அதிகரிக்க வேண்டும்.
   (ii) இயந்திரத்தின் மதிப்பை `15,000 குறைக்க வேண்டும்.
   (iii) கொடுபட வேண்டியச் செலவுகளுக்கு `8,000 ஒதுக்கு உருவாக்க வேண்டும்.
   குறிப்பேட்டுப் பதிவுகள் தந்து மறுமதிப்பீட்டுக் கணக்கினைத் தயாரிக்கவும்

6. தாமஸ், அந்தோணி, மற்றும் சபாஸ்டியன் என்றகூட்டாளிகள் இலாப நட்டங்களை 3 : 2 : 1 என்ற விகிதத்தில் பகிர்ந்து கொண்டனர். அவர்களின் 2018, டிசம்பர் 31 ஆம் நாளைய இருப்பு நிலைக்குறிப்பு பின்வருமாறு:

**2017 , டிசம்பர் 31 ஆம் நாளைய இருப்புநிலைக்குறிப்பு**

| பொறுப்புகள் | ₹ | ₹ | சொத்துகள் | ₹ |
|---|---|---|---|---|
| முதல் கணக்குகள் | | | நிலம் | 40,000 |
| தாமஸ் | 25,000 | | சரக்கிருப்பு | 10,000 |
| அந்தோணி | 20,000 | | கடனாளிகள் | 15,000 |
| சபாஸ்டியன் | 5,000 | 50,000 | ரொக்கம் | 7,000 |
| பொதுக்காப்பு | | 18,000 | இலாபநட்டக் க/கு (நட்டம்) | 3,000 |
| பற்பல கடனீந்தோர் | | 7,000 | | |
| | | 75,000 | | 75,000 |

01.01.2019 அன்று சபாஸ்டியன் இறந்து விட்டார் மற்றும் அவரின் இறப்பின் போது பின்வரும் சரிக்கட்டுதல்கள் செய்யப்பட்டன.

- சரக்கிருப்பின் மதிப்பு 10 % தேய்மானம் குறைக்கப்பட வேண்டும்.
- நிலத்தின் மதிப்பு ரூ. 5,500 அதிகரிக்கப்பட வேண்டும்.
- கடனாளிகள் மதிப்பு ரூ. 1,500 குறைக்க வேண்டும்.
- சபாஸ்டியனுக்கு செலுத்த வேண்டிய இறுதித் தொகை செலுத்தப்படவில்லை.

கூட்டாளியின் இறப்பிற்கு பின் நிறுமத்தின் மறுமதிப்பீட்டுக் கணக்கு, கூட்டாளிகள் முதல் கணக்கு மற்றும் இருப்புநிலைக்குறிப்பு தயாரிக்கவும்.

7. ஒரு கூட்டண்மை நிறுவனத்தி ல் கண்ணன் , ரஹிம் மற்றும் ஜான் என்ற கூட்டாளிகள் தங்கள் இலாபம் மற்றும் நட்டங்களை 5:3:2 என்ற விகிதத்தில் பகிர்ந்து வந்தனர் . 2017, டிசம்பர் 31 ஆம் நாளைய இருப்புநிலைக் குறிப்பு பின்வருமாறு

| பொறுப்புகள் | ` | ` | சொத்துகள் | ` |
|---|---|---|---|---|
| முதல் கணக்குகள்: | | | கட்டடம் | 90,000 |
| கண்ணன் | 1,00,000 | | இயந்திரம் | 60,000 |
| ரஹிம் | 80,000 | | கடனாளிகள் | 30,000 |
| ஜான் | 40,000 | 2,20,000 | சரக்கிருப்பு | 20,000 |
| தொழிலாளர் ஈட்டு நிதி | | 30,000 | வங்கி ரொக்கம் | 50,000 |
| கடனீந்தோர் | | 20,000 | இலாபநட்டக் க/கு (நட்டம்) | 20,000 |
| | | 2,70,000 | | 2,70,000 |

ஜான் 2018, ஜனவரி 1 அன்று பின்வரும் நிபந்தனைகளுக்குட்பட்டு கூட்டாண்மையிலிருந்து விலகினார். (i) கட்டடத்தின் மீது 10% மதிப்பேற்றம் செய்யப்பட்டது.

(ii) சரக்கிருப்பு மதிப்பு 5% குறைக்க வேண்டும்.

(iii) ₹1,000 வாராக்கடன் ஒதுக்கு உருவாக்க வேண்டும்.

(iv) பதிவுறா பொறுப்பு ₹8,000 என கண்டறியப்பட்டது.

(v) விலகும் கூட்டாளிக்குரிய தொகை உடனடியாகச் செலுத்தப்பட்டது

மறுமதிப்பீட்டுக் கணக்கு, கூட்டாளிகள் முதல் கணக்கு மற்றும் விலகலுக்குப் பின் நிறுவனத்தின் இருப்புநிலைக் குறிப்பு தயாரிக்கவும்.

8. ***ரங்கன்,ராஜா மற்றும் ரவி என்ற கூட்டாளிகளின் இலாபப்பகிர்வு விகிதம் 3 : 2. 2019 டிசம்பர் 31 ம் நாளைய அவர்களின் இருப்புநிலைக்குறிப்பு பின்வருமாறு :***

| பொறுப்புகள் | ₹ | ₹ | சொத்துக்கள் | ₹ | ₹ |
|---|---|---|---|---|---|
| பொதுக்காப்பு | | 16,000 | இயந்திரம் | | 90,000 |
| கடனீந்தோர் | | 16,000 | சரக்கிருப்பு | | 44,000 |
| | | | ரொக்கம் | | 8,000 |
| முதல் க/கு :- | | | வங்கி | | 20,000 |
| ரங்கன் | 60,000 | | பற்பல் கடனாளிகள் | | 30,000 |
| ராஜா | 60,000 | | | | |
| ரவி | 40,000 | 1,60,000 | | | |
| | | 1,92,000 | | | 1,92,000 |

***31.12.2017 அன்று ரவி இறந்து விட்டார். ரவியின் இறப்பின் போது பின்வரும் சரிகட்டுதல்கள் செய்யப்பட்டன.***

1. பொறி இயந்திரம் மதிப்பு ₹ 1,08,000 ஆக மதிப்பிடப்பட்டது
2. சரக்கிருப்பு மதிப்பில் ₹ 2,000 குறைக்கப்பட வேண்டும்
3. நிறுவனத்தின் நற்பெயர் ₹ 48,000 என மதிப்பிடப்பட்டது.
4. கடந்த நிதியாண்டின் இறுதியில் இருந்து கூட்டாளி இறந்த நாள் வரை உள்ள இலாபத்தின் பங்கு கூட்டாளியின் இறப்பிற்கு முன் உள்ள மூன்று முழு ஆண்டுகளின் சராசரி இலாப அடிப்படையிலானது.
   2018, 2016 மற்றும் 2017 ஆம் ஆண்டுகளுக்கான இலாபம் முறையே ₹ 1,32,000 , ₹ 1,20,000 மற்றும் ₹ 1,32,000 ஆகும்.

ரவி இறப்பிற்குப் பின் உடனடியாக தயாரிக்கப்பட வேண்டிய பேரேட்டுக் கணக்குகள் மற்றும் இருப்புநிலைக் குறிப்பினைத் தயாரிக்கவும்.

## *7. நிறுமக் கணக்குகள்*

### *2, 3 & 5 மதிப்பெண்கள்*

1. மலையன் நிறுமம் ₹ 100 மதிப்புள்ள 10000 நேர்மைப் பங்குகளை வெளியீட செய்தது. விண்ணப்பத்தின் போது ₹ 50 ; ஒதுக்கீட்டின் போது ₹ 20 ; முதல் அழைப்பின் போது ₹ 20 ; மற்றும் இறுதி அழைப்பின் போது ₹ 10 செலுத்த வேண்டும். அனைத்து பங்குகளும் ஒப்பப்பட்டு தொகை பெறப்பட்டது. குறிப்பேட்டுப் பதிவுகள் தருக.



2. பிரபா நிறுமம் 10 மதிப்புள்ள 10000 நேர்மைப் பங்குகளை விண்ணப்பத்தின் போது ₹ 5 , ஒதுக்கீட்டின் போது ₹ 3 முதல் மற்றும் இறுதி அழைப்பின் போது ₹ 2 செலுத்தும் வகையில் வெளியிடப்பட்டது. 9000 பங்குகளை வாங்க பொதுமக்கள் விண்ணப்பித்தனர். இயக்குனர்கள் 9000 பங்ககளையும் ஒதுக்கீடு செய்து அதற்கான தொகையையும் பெற்றும் கொண்டனர். தேவையான குறிப்பேட்டுப் பதிவினைத் தருக.

3. சம்பத் நிறுமம் 25,000 பங்குகளை, பங்கு ஒன்று ₹ 10 என பொதுமக்களுக்கு வெளியிட்டது. விண்ணப்பத்தின் போது ₹ 3, ஒதுக்கீட்டின் போது ₹ 4, முதல் மற்றும் இறுதி அழைப்பின் போது ₹ 3 செலுத்தப்படவேண்டும். பொதுமக்களால் 24,000 பங்குகள் ஒப்பப்பட்டன. இயக்குனர்கள் அனைத்து பங்குகளையும் ஒதுக்கீடு செய்தனர். அதற்காக தொகை முழுவதும் முறையாகப் பெறப்பட்டன. தேவையான குறிப்பேட்டுப் பதிவுகளைத்தரவும்.

4. மும்தாஜ் நிறுமம் ₹ 100 மதிப்புள்ள 10000 பங்குகளை முகமதிப்பில் பொதுமக்களுக்கு வெளியிட்டது. பங்குகள் மீதான பணம் செலுத்த வேண்டிய விவரங்கள் பின்வருமாறு

| | |
|---|---|
| விண்ணப்பத்தின் போது பங்கொன்றிற்கு | ₹ 50 |
| ஒதுக்கீட்டின் போது பங்கொன்றிற்கு | ₹ 30 |
| முதல் மற்றும் இறுதி அழைப்பின் போது பங்கொன்றிற்கு | ₹ 20 |

12000 பங்குகளுக்கு விண்ணப்பத் தொகை பெறப்பட்டது. கூடுதல் விண்ணப்பத் தொகை உடனடியாக திருப்பிச் செலுத்தப்பட்டது. மேற்கண்டவற்றை பதிவு செய்ய குறிப்பேட்டுப் பதிவுகளைத் தருக.

5. ரவி நிறுமத்தால் ₹ 100 முகமதிப்புடைய நேர்மைப்பங்குகளில் மீனா என்பவர் வைத்திருந்து ₹ 100 நேர்மைப் பங்குகளுக்கு இறுதி அழைப்புத் தொகையான ₹ 30 செலுத்தாத காரணத்தால் அவை ஒறுப்பிழப்பு செய்யப்பட்டன. அப்பங்குகள் ₹ 60 வீதம் ரமாவுக்க மறுவெளியீடு செய்யப்பட்டன. ஒறுப்பிழப்பு மற்றும் மறுவெளியீட்டிற்கான குறிப்பேட்டுப் பதிவுகளைத் தரவும்.

6. மணி நிறுமத்தால் ₹ 10 முகமதிப்புடைய நேர்மைப்பங்குகளில் மீனா என்பவர் வைத்திருந்து ₹ 100 நேர்மைப் பங்குகளுக்கு இறுதி அழைப்புத் தொகையான ₹ 4 செலுத்தாத காரணத்தால் அவை ஒறுப்பிழப்பு செய்யப்பட்டன. அவற்றில் 50 பங்குகள் ₹ 9 வீதம் ஷகிலாவுக்கு மறுவெளியீடு செய்யப்பட்டன. ஒறுப்பிழப்பு மற்றும் மறுவெளியீட்டிற்கான குறிப்பேட்டுப் பதிவுகளைத் தரவும்.

7. நற்றினை ஜவுளி வரையறு நிறுமம் ₹ 10 மதிப்பிலான ₹ 7 அழைக்கப்பட்ட 100 பங்குகளை ஒறுப்பிழப்பு செய்தது. இதில் செல்விக்கு பங்கு ஒன்றுக்கு ₹ 6 விண்ணப்பம் மற்றும் ஒதுக்கீட்டிற்கான தொகையினைச் செலுத்தி இருந்தார். அப்பங்குகள் பங்கு ஒன்றிற்கு ₹ 7 பெற்றுக் கொண்டு சௌந்தர்யாஎன்பவருக்கு மறுவெளியீடு செய்யப்பட்டது. ஒறுப்பிழப்பு மற்றும் மறுவெளியீட்டிற்கான குறிப்பேட்டுப் பதிவுகளைத் தரவும்.

8. தனம் நிறுமம் 1000 ₹ 100 மதிப்புள்ள நேர்மைப் பங்குகளை ₹ 20 முனைமத்தில் 1400 பங்குகள் விண்ணப்பித்தவர்களுக்கு விகித அளவு அடிப்படையில் ஒதுக்கீடு செய்தது. மிகுதியாகப் பெறப்பட்ட விண்ணப்பத் தொகை ஒதுக்கீட்டுத் தொகையில் சரிக்கட்டப்படும். பங்கொன்றுக்கு விண்ணப்பத்தின் போது ₹ 20 ஒதுக்கீட்டின் போது ₹ 50 ( முனைமம் உட்பட) முதல் அழைப்பின் போது ₹ 30 மற்றும் இறுதி அழைப்பின் போது ₹ 20 செலுத்தப்பட வேண்டும். விமல் என்ற பங்குதாரர் தன்னுடைய 30 பங்குகளுக்கான முதல் மற்றும் இறுதி அழைப்புகளை செலுத்தத் தவறினார். அனைத்துப் பங்குகளும் ஒறுப்பிழப்பு செய்யப்பட்டன. அவற்றில் 20 பங்குகள்

பங்கொன்றுக்கு ₹ 90 வீதம் மறுவெளியீடு செய்யப்பட்டன. தேவையான குறிப்பேட்டுப் பதிவுகளைத் தருக.

## *8. நிதிநிலை அறிக்கை பகுப்பாய்வு*

### *2, 3 & 5 மதிப்பெண்கள்*

1. **முருகன் நிறுமத்தின் தகவல்களிலிருந்து ஒப்பீட்டு வருமானஅறிக்கையைத் தயாரிக்க**

| விவரம் | 2015 – 16<br>₹ | 2016 –17<br>₹ |
|---|---|---|
| விற்பனை மூலம் பெற்ற வருவாய் | 2,00,000 | 2,50,000 |
| இதர வருமானம் | 50,000 | 40,000 |
| செலவுகள் | 1,50,000 | 1,20,000 |

2. **சாமுவேல் நிறுமத்தின் பின்வரும் தகவல்களிலிருந்து, ஒப்பீட்டு வருமான அறிக்கையைத் தயார் செய்யவும்.**

| விவரம் | 2015 – 16<br>₹ | 2016 –17<br>₹ |
|---|---|---|
| விற்பனை மூலம் பெற்ற வருவாய் | 4,00,000 | 5,00,000 |
| இதர வருமானம் | 2,00,000 | 1,80,000 |
| வருமான வரி % ( வரிக்கு முன்னர் உள்ள இலாபத்தில்) | 20 | 50 |

3. மரியா மற்றும் கலா நிறுமத்தின்பின்வரும் தகவல்களிலிருந்து 2019, மார்ச்31 ஆம் நாளோடு முடிவடையும் ஆண்டுக்குரிய பொது அளவு வருமான அறிக்கையைத் தயார் செய்யவும்.

| விவரம் | மரியா நிறுமம் | கலா நிறுமம் |
|---|---|---|
| | ₹ | ₹ |
| விற்பனை மூலம் பெற்ற வருவாய் | 1,00,000 | 2,00,000 |
| இதர வருமானம் | 10,000 | 30,000 |
| செலவுகள் | 70,000 | 1,20,000 |

4. பின்வரும் தகவல்களிலிருந்து கலா நிறுமத்தின் போக்கு சதவீதங்களைக் கணக்கிடுக

| விவரம் | ₹(ஆயிரத்தில்) | | |
|---|---|---|---|
| | 2015 – 16<br>₹ | 2016 –17<br>₹ | 2017–18<br>₹ |
| விற்பனை மூலம் பெற்ற வருவாய் | 400 | 500 | 600 |
| இதர வருமானம் | 100 | 150 | 200 |
| செலவுகள் | 200 | 290 | 350 |

5. கலா நிறுமத்தின் பின்வரும் தகவல்களிலிருந்து ஒப்பீட்டு நிதிநிலை அறிக்கையைத் தயாரிக்கவும்

| விவரம் | 2017, மார்ச் 31<br>₹ | 2018 ,மார்ச் 31<br>₹ |
|---|---|---|
| I. பங்கு மூலதனம் மற்றும் பொறுப்புகள் | | |
| 1. பங்குதாரர் நிதி | | |
| (அ) பங்குமுதல் | 3,00,000 | 3,60,000 |
| (ஆ) காப்பும் மிகுதியும் | 50,000 | 50,000 |
| 2. நீண்டகாலப் பொறுப்புகள் | | |
| நீண்ட காலக் கடன்கள் | 50,000 | 40,000 |
| 3. நடப்புப் பொறுப்புகள் | | |
| கணக்குகள் மூலம் செலுத்த வேண்டியவைகள் | 20,000 | 12,000 |
| மொத்தம் | 4,20,000 | 4,62,000 |
| II. சொத்துக்கள் | | |
| 1. நீண்டகாலச் சொத்துக்கள் | | |
| (அ) நிலைச் சொத்துக்கள் | 2,50,000 | 2,90,000 |
| (ஆ) நீண்டகால முதலீடுகள் | 50,000 | 40,000 |
| 2. நடப்புச் சொத்துக்கள் | | |
| சரக்கிருப்பு | 80,000 | 1,00,000 |
| ரொக்கம் மற்றும் ரொக்கத்திற்குச் சமானமானவைகள் | 40,000 | 32,000 |
| மொத்தம் | 4,20,000 | 4,62,000 |



6. ராணி நிறுமத்தின்பின்வரும் தகவல்களிலிருந்து பொது அளவு நிதிநிலை அறிக்கையினைத் தயார் செய்யவும்.

| விவரம் | 2016, மார்ச் 31<br>₹ | 2017, மார்ச் 31<br>₹ |
|---|---|---|
| I. பங்கு மூலதனம் மற்றும் பொறுப்புகள் | | |
| பங்குதாரர் நிதி | 5,40,000 | 6,00,000 |
| நீண்ட காலப் பொறுப்புகள் | 2,70,000 | 2,50,000 |
| நடப்புப் பொறுப்புகள் | 90,000 | 1,50,000 |
| மொத்தம் | 9,00,000 | 10,00,000 |
| II. சொத்துக்கள் | | |
| நீண்ட காலச் சொத்துக்கள் | 7,20,000 | 8,00,000 |
| நடப்புச் சொத்துக்கள் | 1,80,000 | 2,00,000 |
| மொத்தம் | 9,00,000 | 10,00,000 |

7. பின்வரும் தகவல்களிலிருந்து, பாபு நிறுமத்தின், போக்கு விகிதங்களைக் கணக்கிடுக.

| விவரம் | ₹ ஆயிரங்களில் | | |
|---|---|---|---|
| | முதலாம் ஆண்டு | இரண்டாம் ஆண்டு | மூன்றாம் ஆண்டு |
| | ₹ | ₹ | ₹ |

| | | | |
|---|---|---|---|
| I. பங்கு மூலதனம் மற்றும் பொறுப்புகள் | | | |
| 1. பங்குதாரர் நிதி | | | |
| (அ) பங்குமுதல் | 100 | 127 | 106 |
| (ஆ) காப்பும் மிகுதியும் | 30 | 30 | 45 |
| 2. நீண்டகாலப் பொறுப்புகள் | | | |
| நீண்ட காலக் கடன்கள் | 70 | 77 | 84 |
| 3. நடப்புப் பொறுப்புகள் | | | |
| கணக்குகள் மூலம் செலுத்த வேண்டியவை | 20 | 30 | 40 |
| மொத்தம் | 220 | 264 | 275 |
| II. சொத்துக்கள் | | | |
| 1. நீண்டகாலச் சொத்துக்கள் | | | |
| (அ) நிலைச் சொத்துக்கள் | 100 | 118 | 103 |
| (ஆ) நீண்டகால முதலீடுகள் | 40 | 50 | 60 |
| 2. நடப்புச் சொத்துக்கள் | | | |
| சரக்கிருப்பு | 60 | 66 | 72 |
| ரொக்கம் மற்றும் ரொக்கத்திற்குச் சமமானவை | 20 | 30 | 40 |
| மொத்தம் | 220 | 264 | 275 |

## *9. விகிதப் பகுப்பாய்வு*
## *2, 3 & 5 மதிப்பெண்கள்*

**01. கீழ்க்கண்ட தகவல்களிலிருந்து நடப்பு விகிதத்தைக் கணக்கிடவும் :**

| விவரம் | ₹ | விவரம் | ₹ |
|---|---|---|---|
| குறுகிய கால முதலீடுகள் | 4,000 | நிலைச் சொத்துக்கள் | 50,000 |
| சரக்கிருப்பு | 20,000 | வணிகத்தின் கடனீந்தோர் | 8,000 |
| வணிகத்தின் கடனாளிகள் | 12,000 | செலுத்துதற்குரிய | 5,000 |
| பெறுதற்குரிய மாற்றுச்சீட்டுகள் | 8,000 | மாற்றுச்சீட்டு | 2,000 |
| ரொக்கம் மற்றும் ரொக்கத்திற்குச் சமமானவைகள் | 1,000 | கொடுபட வேண்டிய செலவுகள் | 30,000 |
| | | நீண்டகால பொறுப்புகள் | |

**02. கீழ்க்கண்ட தகவல்களிலிருந்து விரைவு விகிதத்தைக் கணக்கிடவும். மொத்த நடப்புச் பொறுப்புகள் ₹ 2,40,000 ; மொத்த நடப்புச் சொத்துக்கள் ₹ 4,50,000; சரக்கிருப்பு ₹ 70,000; முன்கூட்டிச் செலுத்திய செலவுகள் ₹ 20,000.**

**03. பிரபா நிறுமத்தின் பின்வரும் 31.03.2017 ஆம் நாளைய இருப்புநிலைக்குறிப்பிலிருந்து கீழ்க்காணும் விகிதங்களைக் கணக்கிடவும்.**

**i) புற அக பொறுப்புகள் விகிதம் ii) உரிமையாளர் விகிதம்**

**iii) முதல் உந்துதிறன் விகிதம்**



**ஜேம்ஸ் நிறுமத்தின் 31.03.2019 ஆம் நாளைய இருப்புநிலைக்குறிப்பு**

| விவரம் | தொகை ₹ |
|---|---|
| **I பங்கு மூலதனம் மற்றும் பொறுப்புகள்** | |
| **I. பங்குதாரர் நிதி** | |
| (அ) பங்கு முதல் | |
| நேர்மைப் பங்கு முதல் | 5,00,000 |
| 8% முன்னுரிமைப் பங்கு முதல் | 4,00,000 |
| (ஆ) காப்புகள் மற்றும் மிகுதி | 3,00,000 |
| **2.நீண்டகாலப் பொறுப்புகள்** | |
| நீண்டகாலக் கடன்கள் (6 % கடனீட்டுப் பத்திரங்கள்) | 6,00,000 |
| **3.நடப்புப் பொறுப்புகள்** | |
| (அ) வங்கியிலிருந்து பெற்ற குறுகிய காலக் கடன்கள் | 4,00,000 |
| (ஆ) கணக்குகள் மூலம் செலுத்த வேண்டியவைகள் | 2,00,000 |
| **மொத்தம்** | 24,00,000 |
| **II சொத்துக்கள்** | |
| ***1. நீண்ட காலச் சொத்துக்கள்*** | |
| நிலைச் சொத்துக்கள் | 16,00,000 |
| **2. நடப்புச் சொத்துக்கள்** | |
| (அ) சரக்கிருப்பு„ | 2,40,000 |
| (ஆ) கணக்குகள் மூலம் பெற வேண்டியவைகள் | 5,30,000 |
| (இ) ரொக்கம் மற்றம் ரொக்கத்திற்க சமமானவைகள் | 20,000 |
| (ஈ) இதர நடப்புச் சொத்துக்கள் | |
| முன்கூட்டிச் செலுத்திய செலவுகள் | 10,000 |
| **மொத்தம்** | 24,00,000 |

**04. பின்வரும் நிலைகளில் இயக்க இலாப விகிதம் கணக்கிடவும்.**

**நிலை 1 ; விற்பனையிலிருந்து பெற்ற வருவாய் ₹ 4,00,000 , இயக்க இலாபம் ₹ 1,00,000**

**நிலை 2 ; விற்பனையிலிருந்து பெற்ற வருவாய் ₹ 10,00,000 , இயக்க அடக்கவிலை ₹ 7,00,000.**

**நிலை 3 ; விற்பனையிலிருந்து பெற்ற வருவாய் ₹ 5,00,000, மொத்த இலாபம் விற்பனையிலிருந்து பெற்ற வருவாயில் 25%, இயக்கச் செலவுகள் ₹ 50,000**

**05. ராஜா நிறுமத்தின் 2011 மார்ச் 31 ஆம் நாளைய இருப்புநிலைக்குறிப்பு (வருவிய) பின்வருமாறு**

| விவரம் | ₹ |
|---|---|
| I. பங்கு மூலதனம் மற்றும் பொறுப்புகள் | |
| 1. பங்குதாரர் நிதி | |
| (அ) பங்குமுதல் | 1,00,000 |
| (ஆ) காப்புகள் மற்றும் மிகுதி | 25,000 |
| 2. நீண்ட கால பொறுப்புகள் | |
| நீண்ட கால கடன்கள் | 75,000 |
| 3. நடப்புப் பொறுப்புகள் | |
| (அ) கணக்குகள் மூலம் செலுத்த வேண்டியவைகள் | 65,000 |
| (ஆ) இதர நடப்புப் பொறுப்புகள் | 2,500 |

| (இ) குறுகிய கால ஒதுக்குகள் | 10,000 |
|---|---|
| மொத்தம் | 2,77,500 |

**06.** **அருணா நிறுமத்தின் பின்வரும் தகவல்களிலிருந்து (i) சரக்கிருப்பு சுழற்சி விகிதம் (ii) கணக்குகள் மூலம் பெற வேண்டியவைகளின் சுழற்சி விகிதம் (ii) கணக்குகள் மூலம் செலுத்த வேண்டியவைகளின் சுழற்சி விகிதம் மற்றும் (iv) நிலைச்சொத்துகள் சுழற்சி விகிகம் கணக்கிடவும்.**

| விவரம் | 2018, மார்ச் 31 ₹ | 2019, மார்ச் 31 ₹ |
|---|---|---|
| சரக்கிருப்பு | 3,60,000 | 4,40,000 |
| கணக்குகள் மூலம் பெற | 7,40,000 | 6,60,000 |
| வேண்டியவைகள் | 1,90,000 | 2,30,000 |
| கணக்குகள் மூலம் செலுத்த | 6,00,000 | 8,00,000 |
| வேண்டியவைகள் | | |
| நிலைச்சொத்துகள் | | |

**கூடுதல் தகவல்கள்–**

(i) அவ்வாண்டில் விற்பனையிலிருந்து பெற்ற வருவாய் ₹ 35,00,000

(ii) அவ்வாண்டில் கொள்முதல் ₹ 21,00,000

(iii) விற்பனையிலிருந்து பெற்ற வருவாய்க்கான அடக்கவிலை ₹ 16,00,000. விற்பனை மற்றும் கொள்முதலை கடன் விற்பனை மற்றும் கடன் கொள்முதல் எனக் கொள்ளவும்.

**07.** **டெரிக்ஸ்டன் நிறுமத்தின் பின்வரும் இலாப நட்ட அறிக்கையிலிருந்து**

**(i) மொத்த இலாப விகிதம் (ii) நிகர இலாப விகிதம் கணக்கிடவும்**

**டெரிக்ஸ்டன் நிறுமத்தின் இலாப நட்ட அறிக்கை**

| விவரம் | ₹ |
|---|---|
| **I. விற்பனையிலிருந்து பெற்ற வருவாய்** | 24,00,000 |
| **II. இதர வருமானம் :** | |
| முதலீடுகளிலிருந்து பெற்ற வருவாய் | 70,000 |
| **III மொத்த வருவாய் (I +II)** | 24,70,000 |
| **IV. செலவுகள் :** | |
| கொள்முதல் செய்த சரக்குகள் | 18,80,000 |
| சரக்கிருப்பு மாற்றம் | (–)80,000 |
| பணியாளர் நலன்களுக்கான செலவுகள் | 2,90,000 |
| இதர செலவுகள் | 1,10,000 |
| வரி ஒதுக்கு | 30,000 |
| மொத்த செலவுகள் | 22,30,000 |
| **V. அவ்வாண்டின் இலாபம்** | 2,40,000 |

**PREPARED BY**

**G. PRAKASH. M.COM.M.PHIL.B.ED.D.TED.**

**GUGAI HR.SEC.SCHOOL.SALEM 6.**

**9488270034**